**நீதித்துறை நடுவர் எண்.2, சிவகாசி.**

**முன்னிலை : திரு.அ. விஜயபாரதி, பி.ஏ., பி.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.2, சிவகாசி.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாள் புதன்கிழமை

**<u>சி.ஆர்.எம்.பி.எண்.150/2026</u>**

R.ஆனந்தக்குமார் (வயது 38/2025),
த/பெ.ரகுபதி,
1/94, ஆர்.பி.எஸ்.பில்டிங்,
யூனியன் பேங்க் அருகில்,
பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம்.
மெசர்ஸ்.ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட்,
பைனான்ஸ் கம்பெனி லிமிட்,
அதன் அதிகாரம் பெற்ற முகவர். .. மனுதாரர்/வாகனத்தில் சட்டஉரிமைகொண்டவர்

/எதிராக/

அரசுக்காக உதவி ஆய்வாளர்,
எம்.புதுப்பட்டி காவல் நிலையம்,
குற்ற எண்.119/2021,
இதச பிரிவுகள் 379, 353 மற்றும்
பிரிவு 21(1)Mines & Minerals Regulation Act .... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

மணிகண்டன் (வயது 37/21),
த/பெ.முத்துமாரி,
க.எண்.8/45,
கிழக்குத்தெரு,
மங்கல்ரேவு,
பேரையூர் தாலுகா,
மதுரை மாவட்டம். ... எதிரி/வாகனத்தின் உரிமையாளர்

இம்மனு 11.03.2026 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ரகு பி.ஏ.பி.எல்., அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பின் பதிலை பெற்றும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், மனுவை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

இம்மனு மனுதாரர்/வாகனத்தின் சட்ட உரிமை கொண்டவர் தரப்பில் பி.என்.எஸ்.எஸ்.பிரிவு 497 மற்றும் 503–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர் தரப்பில், இவ்வழக்கு சொத்தான TN 58 AT 3902 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரி என்ற வாகனத்தை எதிரி மணிகண்டன் மனுதாரரின் ஸ்ரீராம்

VIJAYA BHARATHI

Digitally signed by VIJAYA BHARATHI

பைனான்ஸ் நிதி நிறுவனத்திலிருந்து வாகன கடன் பெற்று வாங்கி பயன்படுத்தி வந்தார். இந்நிலையில் மேற்படி வாகனத்தினை கொண்டு எதிரி மணிகண்டன் கிராவல் மணல் திருடிய குற்றத்திற்காக அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு வாகனம் கைப்பற்றப்பட்டு தற்போது எம்.புதுப்பட்டி காவல் நிலையத்தினர் பாதுகாப்பில் இருந்து வருகிறது. மேற்படி வாகனம் செயல்பாடின்றி ஒரே இடத்தில் நிற்பதால் பராமரிப்பின்றியும், மழை, வெயிலினால் பாதிக்கப்பட்டும் பழுதடைந்து பயனற்று போய்விடும் என்றும், வழக்குச்சொத்தை தன்னிடம் ஒப்படைக்கும் பட்சத்தில் அதனை பொது ஏலத்தில் விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கும் தொகையை எதிரியின் கடன் ஒப்பந்த எண்ணில் வரவு வைத்துக்கொள்ள இயலும் என்றும், எனவே வழக்கு சொத்தான TN 58 AT 3902 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரி என்ற வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்கக்கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3) அரசு தரப்பில் பதில் பெறப்பட்டது. அதில் வாகனத்தின் உரிமையாளரான 1 வதுஎதிரி மணிகண்டன் வாகனத்தை திரும்ப கேட்டு மனு தாக்கல் செய்யாமல், ஸ்ரீராம் பைனான்ஸ் நிறுவனம் சார்பாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாகனத்தினை மனுதாரருக்கு வழங்கினால் வழக்கு சொத்தினை விற்பனை செய்யவோ, வண்ண மாற்றம் செய்யவோ வாய்ப்புள்ளது என்பதாலும் வழக்குச் சொத்தை மனுதாரரின் வசம் ஒப்படைக்க கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

4) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் இந்த மனுவினை ஸ்ரீராம் பைனான்ஸ் நிறுவனம் சார்பாக தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் மனுவில் எதிரியான மணிகண்டன் என்பவர் ஸ்ரீராம் பைனான்ஸ் நிறுவனத்திடம் வாகன கடன் பெற்று வழக்கு தொடர்புடைய TN 58 AT 3902 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியை வாங்கி பயன்படுத்தி வந்தார் என்று கூறப்பட்டுள்ள போதிலும், மேற்படி வாகனம் மனுதாரரின் பைனான்ஸ் நிறுவனத்தில் வாகன கடன் பெற்று வாங்கப்பட்டது என்பதையும், எதிரி மனுதாரரின் பைனான்ஸ் நிறுவனத்திற்கு வாகன கடனை செலுத்தவில்லை என்பதையும் காட்டுவதற்கு எந்தவித ஆவணத்தினையும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவில்லை. எனவே வழக்கு சொத்தான TN 58 AT 3902 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியை தன்

வசம் ஒப்படைக்க கோருவதற்கு மனுதாரருக்கு எந்தவித முகாந்திரமும் இல்லை என முடிவு செய்து மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

இறுதியாக மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

VIJAYA BHARATHI

Digitally signed by VIJAYA BHARATHI

நீதித்துறை நடுவர் எண்.2,
சிவகாசி.